DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.243/2023**

Deposition of Witness : PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விஜயா | Husband's Name | : | கருப்பையா |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 21-09-2024.

முதல் விசாரணை–

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ–1, வாகனத்தின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ–2, மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ–3, காயச்சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ–4, மருத்துவ விடுவிப்பு குறிப்பு ம.சா.ஆ–5, ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ–6. மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ–6 அசல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டு அசல் ஆவணம் மீண்டும் சாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது).

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:–

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றது எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டும் உரிமம் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நாங்கள் தேனியிலிருந்து போடி நோக்கி சென்றோம். விபத்து நடந்த இடத்திற்கும், பூரணவித்யா பள்ளிக்கும் ஒரு கி.மீ தூரம் இருக்கும். ஒரு கி.மீ. தூரத்திற்கு முன்பாக தான் குவாரிக்கு செல்லும் பாதை உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் டிராக்டர் எங்களுக்கு குறுக்காக வந்தது. டிராக்டர் குவாரிக்கு செல்லும் சாலையில் சென்றது, எங்களை அடித்து தூக்கிவிட்டது. எங்கள் வாகனம்

நொறுங்கிவிட்டது. எனது கணவருக்கு 65 வயது. விபத்து சமயத்தில் டிராக்டர் திரும்புவதற்காக சாலையில் நின்றுகொண்டிருந்த நிலையில் முந்திச்சென்றபோது எனது கால் வாகனத்தின் பம்பரில் பட்டு நான் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் நான் சென்ற இருசக்கர வாகனத்திற்கும், டிராக்டருக்கும் எவ்வித சேதமும் இல்லை என்றால் சரியல்ல. டிராக்டருக்கு எவ்வித சேதமும் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் சான்று வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் சென்ற இருசக்கர வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் நான் போடி அரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். எனது கணவர் தலைக்கவசம் அணியவில்லை, ஆனால் வாகனத்தில் வைத்திருந்தார். எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், தவறான தகவலை சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும், டிராக்டர் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நின்று கொண்டிருந்த டிராக்டரின் மீது நாங்கள் சென்று மோதி எனது கால் வாகனத்தின் மீது பட்டு நான் கீழே விழுந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*

*Sd/-K.Kavitha,*
Chief Judicial Magistrate,
Theni.